# ஸ்ரீ கோவிந்தராஜ சுவாமி கோயிலில் ஆழ்வார் திருமஞ்சனம்

**திருப்பதி, மே 29:** திருப்பதியில் உள்ள கோவிந்தராஜ சுவாமி கோயிலில் வியாழக்கிழமை கோயில் ஆழ்வார் திருமஞ்சனம் நடைபெற்றது

திருமலை தேவஸ்தான கோயில்களில் வருடாந்திர பிரம்மோற்சவங்களுக்கு முன்பு கோயில் ஆழ்வார் திருமஞ்சனம் நடத்துவது வழக்கம்.

அதன்படி திருப்பதியில் உள்ள கோவிந்தராஜ சுவாமி கோயிலில் வரும் ஜூன் 2–ஆம் தேதி முதல் 10–ஆம் தேதி வரை வருடாந்திர பிரம்மோற்சவம் நடைபெற உள்ளது.

அதை முன்னிட்டு வியாழக்கிழமை கோயில் முழுவதும் சுத்தப்படுத்தும் கோயில் ஆழ்வார் திருமஞ்சனம் நடைபெற்றது.

திருப்பதி கோவிந்தராஜ சுவாமி கோயிலில் நடைபெற்ற கோயில் ஆழ்வார் திருமஞ்சனம்.

நிகழ்வில், காலை 6.45 மணிக்கு கோயில் ஆழ்வார் திருமஞ்சனம் நடைபெற்றது.

இதன் ஒரு பகுதியாக, கோவிந்தராஜ சுவாமியின் பிரகாரத்துடன், கோயில் வளாகத்தில் உள்ள பிற கோயில்களின் சுவர்கள், கூரை, பூஜை பொருள்கள் மற்றும் பிற பொருள்கள் தண்ணீரில் சுத்திகரிக்கப்பட்டன.

பின்னர், நாமகட்டி, ஸ்ரீ சூர்ணம், கஸ்தூரி, மஞ்சள், பச்சை கற்பூரப் பொடி, சந்தனப் பொடி, குங்குமம், கிச்சிலி பொடி மற்றும் பிற மங்கல, வாசனை பொருள்கள் கலந்த புனித நீர் கோயில் முழுவதும் தெளிக்கப்பட்டது. பின்னர், பக்தர்கள் சர்வ தரிசனம் செய்ய அனுமதிக்கப்பட்டனர்.

நிகழ்ச்சியில் கோயில் ஏஇஓ முனி கிருஷ்ணா ரெட்டி, தலைமை அர்ச்சகர் ஏ பி ஸ்ரீனிவாச தீட்சிதுலு, கோயில் ஆய்வாளர் தனுஞ்சயா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## முட்டுக்காட்டில் பன்னாட்டு மாநாட்டு மையம்: முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்

**சென்னை, மே 29:** செங்கல்பட்டு மாவட்டம் முட்டுக்காட்டில் அமையவுள்ள பன்னாட்டு மாநாட்டு மையத்துக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார். இதற்கான நிகழ்ச்சி சென்னை தலைமைச் செயலகத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது.

செங்கல்பட்டு மாவட்டம், முட்டுக்காடு கிழக்கு கடற்கரைச் சாலையில், 37.99 ஏக்கர் பரப்பளவில் ரூ. 525 கோடி மதிப்பில் பன்னாட்டு மாநாட்டு மையம் அமைக்கப்பட உள்ளது. அதில், 10 ஆயிரம் பேர் அமரக்கூடிய பொருள்காட்சி அரங்கம், 5 ஆயிரம் பேர் அமரக் கூடிய மாநாட்டு மண்டபம், கலையரங்கம் உள்ளிட்ட வசதிகளுடன் பன்னாட்டு மையம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த மையத்துக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்வில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, தலைமைச் செயலர் நா.முருகானந்தம், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலர் மங்கத்ராம் சர்மா உள்பட பலர் பங்கேற்றனர்.

## ஆற்காட்டில் ஜமாபந்தி நிறைவு

பயனாளிக்கு நலத்திட்ட உதவி வழங்கிய ஆற்காடு எம்எல்ஏ ஜெ.எல். ஈஸ்வரப்பன்.

**ஆற்காடு, மே 29:** ஆற்காடு வட்டாட்சியர் அலுவலகத்தில் ஜமாந்தி நிறைவு விழா வியாழக்கிழமை நடைபெற்றது.

கடந்த 22–ஆம் தேதி தொடங்கிய ஜமாபந்தியில் ஆற்காடு ,திமிரி, புதுப்பாடி உள்ளவட்டங்களைச் சேர்ந்த கிராமங்களின் நிலவரி கணக்குகள் தணிக்கை செய்யப்பட்டன.

மேலும், பொதுமக்களிடம் இருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டன.

இதன் நிறைவு விழாவுக்கு மாவட்ட பிற்படுத்தபட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரும் ஜமாபந்தி அலுவலருமான க.மீனா தலைமை வகித்தார். வட்டாட்சியர்கள் பாக்கியலட்சுமி, செ.ரவி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஆற்காடு எம்எல்ஏ ஜெ.எல். ஈஸ்வரப்பன் கலந்து கொண்டு 112 பயனாளிகளுக்கு ரூ.40.63 லட்சம் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். விழாவில் ஒன்றியக்குழு தலைவர் ஆற்காடு புவனேஸ்வரி சத்யநாதன், திமிரி எஸ்.அசோக், நகராட்சி ஆணையர் வேங்கிட லட்சுமணன், மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## வாரச்சந்தை வளாகத்தில் புதிய கடைகள்: காணொலி மூலம் முதல்வர் திறந்தார்

**வாணியம்பாடி, மே 29:** வாணியம்பாடி நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ஜின்னா சாலை வாரச்சந்தையில் ரூ.4.4 கோடியில் 112 கடைகளை காணொலி மூலம் முதல்வர் மு.க.ஸ்டாலின் வியாழக்கிழமை திறந்து வைத்தார்.

வேலூர் ஒருங்கிணைந்த மாவட்டத்தில் முதன் முதலாக மார்க்கெட் அமைக்கும் பணிக்கு நிதி ஒதுக்கப்பட்டு புதிதாக 112 கடைகள், நிர்வாக கட்டடம், உணவு கூடம், பொது கழிப்பிடம் மற்றும் பாதுகாவலர் அறை கட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில், முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி மூலமாக புதிய கடைகளை(மார்க்கெட்) திறந்து வைத்தார். பின்னர், வாணியம்பாடியில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு நகர்மன்ற தலைவர் உமா சிவாஜிகணேசன் தலைமையில், ஆணையர் பாஸ்கர்(பொ), நகர திமுக செயலாளர் சாரதி குமார் முன்னிலையில் குத்து விளக்கு ஏற்றி வைத்து இனிப்புகள் வழங்கினார்.

நிகழ்வில் பங்கேற்ற நகர்மன்றத் தலைவர் உமாசிவாஜிகணேசன், ஆணையர் பாஸ்கர், நகர செயலர் சாரதி குமார் உள்ளிட்டோர்.

நிகழ்ச்சியில் நகரமைப்பு அலுவலர் திருமுருகன், சுகாதார அலுவலர் அப்துல்ரஹீம், சுகாதார ஆய்வாளர் செந்தில் மற்றும் நகராட்சி அலுவலர்கள், பணியாளர்கள், பொது மக்கள் கலந்து கொண்டனர்.

## கெங்கையம்மன் சிரசு விழா

சிறப்பு அலங்காரத்தில் தட்டப்பாறை கெங்கையம்மன்.

**குடியாத்தம், மே 29:** குடியாத்தத்தை அடுத்த தட்டப்பாறையில் கெங்கையம்மன் சிரசு விழா வியாழக்கிழமை நடைபெற்றது.

இதையொட்டி புதன்கிழமை ஆஞ்சனேயர் வீதி உலா நடைபெற்றது. வியாழக்கிழமை அதிகாலை அம்மன் சிரசு ஊர்வலம் தொடங்கி முக்கிய வீதிகள் வழியாக கோயிலை அடைந்தது. அங்கு கண் திறப்பு நிகழ்ச்சிக்குப் பின்னர், பக்தர்கள் தரிசனத்துக்கு அனுமதிக்கப்பட்டனர். விழாவில் ஒன்றியக் குழு தலைவர் என்.இ.சத்யானந்தம், கோட்டாட்சியர் எஸ்.சுபலட்சுமி, வட்டாட்சியர் பி.மெர்லின்ஜோதிகா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

விழா ஏற்பாடுகளை நிர்வாகிகள் நா.கோ.தேவராஜன், டி.கே.தரணி, வி.எம்.குமார், ஆர்.பிச்சாண்டி, சி.ராமமூர்த்தி, நா.மு.சங்கர், அறநிலையத்துறை தக்கார சு.பாரி உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

## பொன்னை ஆற்றின் கிளை ஓடைகளை புனரமைக்கும் பணி

**ராணிப்பேட்டை,மே 29 :** ராணிப்பேட்டை மாவட்டத்தில், வாழும் கலை அமைப்பு சார்பில் பொன்னை ஆற்றின் கிளை ஓடைகளை புனரமைக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் நிலத்தடி நீர் ஏற்றத்தை அதிகரிக்க ஷன் மைனா மற்றும் வாழும் கலை அமைப்பு இணைந்து 15 மாவட்டங்களில் நீர் ஆதார ஓடைகளை கண்டறிந்து புனரமைப்பு பணிகள் செய்யப்பட்டு வருகிறது.

அதில் வேலூர் மாவட்ட நாகநதியில் கடந்த 2013 ஆண்டு புனரமைப்பு பணி தொடங்கி 2019 ஆண்டில் முடிவடைந்த நிலையில் புனரமைக்கப்பட்ட பிறகு தற்போது 365 நாள்களும் நாகநதியில் தண்ணீர் செல்ல கூடிய நிலைக்கு மாற்றப்பட்டு வெற்றி கண்டதால் இதேபோன்று நீர் ஆதார ஓடைகளை புனரமைப்பு பணிகளை மேற்கொள்ளப்படுகிறது.

அந்த வகையில், வாலாஜா வட்டத்துக்குப்பட்ட கத்தாரிகுப்பம், கொண்டகுப்பம், வசூர், பள்ளேரி ஆகிய பகுதிகளில் உள்ள பொன்னை ஆற்றின் நீர்பிடிப்பு பகுதிகளான ஓடைகளை புனரமைக்க ஷன் மைனா மற்றும் வாழும் கலை அமைப்பு இணைந்து புனரமைக்கும் பணிக்கு முதல்கட்டமாக கத்தாரிக்குப்பம் மற்றும் கொண்டகுப்பம் ஆகிய இரு கிராமங்களில் பூமி பூஜை போடும் நிகழ்வு வாழும் கலை அமைப்பின் திட்ட இயக்குநர் டாக்டர் சந்திரசேகர் தலைமையில் நடைபெற்றது.

பொன்னை ஆற்றின் கிளை ஓடைகளை புனரமைக்கும் பணியின் முக்கியத்துவம் குறித்து கிராம மக்களிடையே விளக்கிய வாழும் கலை அமைப்பின் திட்ட இயக்குநர் சந்திரசேகர்.

குறிப்பாக நாகநதியில் சிறப்பை பாரத பிரதமர் நரேந்திர மோடி பேசி உள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்ச்சியில், கத்தாரிகுப்பம் ஊராட்சி மன்ற தலைவர் பூங்கொடி லோகேஷ், கொண்டகுப்பம் ஊராட்சி மன்ற தலைவர் குமார், வாழும் கலை தொண்டர் ராமமூர்த்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## சுற்றுலாத் தலங்களில் உலகத் தர கட்டமைப்பு

### அமைச்சர் இரா.ராஜேந்திரன் உத்தரவு

**சென்னை, மே 29:** தமிழகத்தில் உள்ள சுற்றுலாத் தலங்களின் கட்டமைப்புகளை உலக தரத்தில் மேம்படுத்த வேண்டும் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. ராஜேந்திரன் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

தமிழக சுற்றுலாத்துறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் சென்னை வாலாஜா சாலையில் உள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக கூட்டங்கத்தில் துறையின் அமைச்சர் இரா.ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் தற்போது நடைபெற்று வரும் சுற்றுலா வளர்ச்சி திட்டப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள சுற்றுலாத் தலங்களில் அடிப்படை உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், புதிய சுற்றுலாத் தலங்களை கண்டறிந்து அவ்விடங்களில் உலக தரத்திலான கட்டமைப்பு ஏற்படுத்தும் படியும் அமைச்சர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இக்கூட்டத்தில் சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலர் க.மணிவாசன், சுற்றுலா ஆணையரும், தமிழக சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் ஷில்பா பிரபாகர் சதீஷ் உள்ளிட்ட அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

## தமிழகத்தில் இன்று 6 மாவட்டங்களுக்கு கனமழைக்கான ஆரஞ்ச் எச்சரிக்கை

**சென்னை, மே 29:** தமிழகத்தில் வெள்ளிக்கிழமை (மே 30) கோவை, நீலகிரி உள்பட 6 மாவட்டங்களுக்கு மிக கனமழைக்கான ஆரஞ்ச் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் சார்பில் வியாழக்கிழமை வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு:

தென்னிந்திய கடலோரப் பகுதியில் நிலவும் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக, வெள்ளிக்கிழமை (மே 30) முதல் ஜூன் 4–ஆம் தேதி வரை தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது.

**கனமழை எச்சரிக்கை:** கோவை மாவட்ட மலைப் பகுதிகளிலும், நீலகிரி, தேனி, தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களிலும் வெள்ளிக்கிழமை (மே 30) ஓரிரு இடங்களில் மிக கனமழை பெய்ய வாய்ப்புள்ளதால் ஆரஞ்ச் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், திருப்பூர், திண்டுக்கல் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வெள்ளிக்கிழமை (மே 30) பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

**கரையைக் கடந்தது:** வங்கக் கடலில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி (புயல் சின்னம்), வடக்கு திசையில் மெதுவாக நகர்ந்து, வியாழக்கிழமை காலை தாழ்வு மண்டலமாக வலுபெற்று மேற்குவங்கம் மற்றும் வங்கதேசத்துக்கு இடைப்பட்ட வங்கக் கடலில் நிலவியது. மேலும், இந்தப் புயல் சின்னம் வடக்கு திசையில் நகர்ந்து, (மேற்கு வங்கம்) சாகர் தீவுகளுக்கும் – கேபுபாராவுக்கு (வங்கதேசம்) இடையே பிற்பகல் கரையைக் கடந்தது. தொடர்ந்து இது படிப்படியாக வலுவிழக்கும்.

**மழை அளவு:** தமிழகத்தில் வியாழக்கிழமை காலை வரை அதிகபட்சமாக நீலகிரி மாவட்டம் அவலாஞ்சியில் 190 மி.மீ. மழை பதிவானது. மேல் பவானி (நீலகிரி) – 130 மி.மீ., சின்னக்கல்லார் (கோவை) –120 மி.மீ., மக்கினம்பட்டி (கோவை), பெரியாறு (தேனி), வால்பாறை (கோவை) – தலா 110 மி.மீ., உபாசி (கோவை) – 100 மி.மீ. மழை பதிவானது.

**மீனவர்களுக்கான எச்சரிக்கை:** தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா, குமரிக்கடல் மற்றும் வங்கக்கடலில் வெள்ளி, சனி (மே 30, 31) ஆகிய இரு நாள்கள் மணிக்கு 60 கி.மீ. வேகத்தில் காற்று வீசக்கூடும். இதனால், மீனவர்கள் அந்தப் பகுதிகளுக்கு மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


**OMKARA ASSETS RECONSTRUCTION PRIVATE LIMITED**

M/s ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிட்டெட்

CIN: U67100TZ2014PTC020363

**கார்ப்பரேட் அலுவலகம்**; கோஹினூர் ஸ்கொயர், 47ஆவது தளம், என்.சி.கெல்கர் மார்க், ஆர்.ஜி கட்காரி சவுக், தாதர் (மேற்கு), மும்பை-400028.

மின்னஞ்சல்: rajesh.jumani@omkaraarc.com தொபே: 022-26544000,

(இந்தியா ரிசர்ஜென்ஸ் ARC டிரஸ்ட் VI-ன் டிரஸ்டி என்ற தகுதியில் செயல்படுவது)

**பிற்சேர்க்கை - IV-A (பார்க்க - விதி 8(6) அதனுடன் தொடர்புடைய 9(1) இன் ஷரத்துகள்)**

**அசையாச் சொத்து விற்பனை செய்யப்படுவதற்கான மின் - ஏல பொது அறிவிப்பு**

**அசையாச் சொத்துகள் விற்பனைக்கான மின் - ஏல விற்பனை அறிவிப்பு- கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 ( " சர்ஃபாசி சட்டம்) இதனுடன் தொடர்புடைய அதனுடன் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002-இன் விதி விதி 8(6) – இதனுடன் – 9(1)இன் ஷரத்துகளின் கீழ்**

இதன் மூலம் பொது மக்களுக்கும் குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) & அடமானதாரர்(களுக்கும்) அறிவிக்கப்படுவது யாதெனில், இதன் கீழ் விவரிக்கப்பட்ட ஈடு பெற்று கடனளித்த சிட்டி யூனியன் வங்கியிடம் அடமானம் / கடன் பொறுப்பு ஏற்படுத்தப்பட்ட அசையா சொத்து தொடர்பாக சர்ஃபாசி சட்டம் மற்றும் 2002 ஆம் ஆண்டுகடனீட்டு சொத்து மீதான உரிமைகள் (அமலாக்க) விதிகளின் கீழான அதிகாரத்தை பயன்படுத்தி 25.10.2019 நாளிட்டப்பட்ட பிரிவு 13(2) இன் கீழான கோரிக்கை அறிவிப்பை அனுப்பி அதன்மூலம் கடன்தாரர்(கள்) / ஜாமின்தாரர்(கள்)/ அடமானதாரர்(கள்)/ பெருநிறுவன ஜாமின்தாரர்(கள்) அஃதாவது 1 M/s. **கீர்த்தி எண்டர்பிரைசஸ் (கடன்தாரர்)**, மனை எண்.23/A, கே.கே.நகர், கணபதிபுரம், ஸ்ரீனிவாசபுரம், கூடுவாஞ்சேரி-அஞ்சல் குறியீடு -603202 . **(2) திரு. K.பரணிதரன் (அடமானதாரர்)**, த/பெ திரு B.S.கண்ணன், லாயல்ஸ் சங்கீதம் ஃபிளாட்ஸ், எண்.28, கதவு எண்.1, பெருமாள் கோவில் தெரு, ஊர்ப்பாக்கம், அஞ்சல் குறியீடு 603202. **(3) திரு. K.பரணிதரன் (அடமானதாரர்)**, த/பெ திரு B.S.கண்ணன், எண்.20, அன்னை நகர், 1 ஆவது சேலையூர், சென்னை, காஞ்சிபுரம் மாவட்டம், அஞ்சல் குறியீடு 600073. **(4) திருமதி. J.ஜீவிதா (இணை-கடன்தாரர்), க/பெ திரு. K.பரணிதரன்**, லாயல்ஸ் சங்கீதம் ஃபிளாட்ஸ், எண்.28, கதவு எண்.1, பெருமாள் கோவில், தெரு, ஊர்ப்பாக்கம், அஞ்சல் குறியீடு: 603202. **(5) திருமதி மனோன்மணி (இணை-கடன்தாரர்), க/பெ திருகண்ணன்**, எண்.20, அன்னை நகர் முதல் சேலையூர், சென்னை, காஞ்சிபுரம் மாவட்டம்-600073. **(6) திருமதி. C. நாகலட்சுமி (இணை-கடன்தாரர்) திரு . M. சந்திரன்**, எண்.26, பிரியா நகர், எண்.4, ஊர்ப்பாக்கம் கிராமம், 603210 ஆகியோருக்கு அனுப்பி 25 அக்டோபர் 2019 அன்றுள்ளபடியான நிலுவை **ரூ.12,75,39,593/- (இந்திய ரூபாய் பன்னிரண்டு கோடியே எழுபத்தைந்து லட்சத்து மூப்பத்தொன்பதாயிரத்து ஐநூற்று தொண்ணூற்று மூன்று மட்டும்)** தொகையை வட்டியுடன் சேர்த்து மேற்கூறிய அறிவிப்பு வெளியான நாளிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்தக் கோரப்பட்டது. கடன்தாரர்(கள்) /ஜாமின்தாரர்(கள்)/ அடமானதாரர்(கள்)/ பெருநிறுவன ஜாமின்தாரர்(கள்) ஆகியோர் 60 நாட்களுக்குள் குறிப்பிட்ட கோரிக்கை அறிவிப்பின்படி முழு நிலுவைத் தொகையையும் திருப்பிச் செலுத்தத் தவறியதால், இந்திய ரிசர்ஜன்ஸ் ARC பிரைவேட் லிமிடெட்டின் அதிகாரப்பூர்வ அலுவலர் SARFAESI சட்டம் மற்றும் கடனீட்டு சொத்து மீதான உரிமைக (அமலாக்க) விதிகளின் 2002 இன் கீழ் பிரிவு 13(4) இன் கீழ் ஒரு அறிவிப்பை வெளியிட்டு, கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டு சொத்தை 13.01.2020 அன்று தங்கள் சுவாதீனம் எடுத்துக்கொண்டார்.

மேலும், முன்னதாக சிட்டி யூனியன் வங்கி 03.05.2023 அன்று M/S. கீர்த்தி எண்டர்பிரைசஸின் கடனை இந்தியா ரிசர்ஜென்ஸ் ARC பிரைவேட் லிமிடெட் (IRAPL) நிறுவனத்திடம் ஒப்படைத்து விட்டது& 16.08.2024 தேதியிட்ட பிணையம் பெற்ற வாங்குதல் ஒப்பந்தத்தின் மூலம் இந்தியா ரிசர்ஜென்ஸ் ARC பிரைவேட் லிமிடெட் அனைத்து உரிமைகள், பாத்தியதை , பொறுப்புகள் மற்றும் கடமைகளை இந்தியா ரிசர்ஜென்ஸ் ARC டிரஸ்ட் IV இன் அறங்காவலராக செயல்படும் **OARPL** பெயருக்கு மாற்றியுள்ளது. இந்தியா ரிசர்ஜென்ஸ் ARC டிரஸ்ட் IV இன் அறங்காவலராக செயல்படும் **OARPL** இப்போது பொறுப்பளித்தவரின் நிலையில் செயல்பட்டு, நிலுவைத் தொகையை வசூலிக்கவும் கடனீட்டு சொத்து மீதான உரிமையை அமல்படுத்தவும் அதிகாரம் பெற்றுள்ளது

எனவே, இந்தியா ரிசர்ஜென்ஸ் ARC அறக்கட்டளை VI இன் அறங்காவலராக செயல்படும் OARPL இன் அதிகாரப்பூர்வ அலுவலர் நிலுவைத் தொகையை வசூலிக்க கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டு சொத்துக்களை விற்க இதன் மூலம் திட்டமிட்டுள்ளார். இதன் கீழ்க்கண்ட அந்தந்த நிரலில் காண்பிக்கப்பட்டுள்ளபடி ஈடு பெற்றுக் கடனளித்த OARPL க்கு அந்தந்த கடன்தாரர் மற்றும் கூட்டு கடன்தாரர்(களிடமிருந்து) நிலுவையாக உள்ள தொகையை வசூலிப்பதற்காக, இதில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் சர்ஃபாசி சட்டம் 13(2) மற்றும் (4)ஆகிய பிரிவுகளின் ஷரத்துகளின் கீழான அதிகாரத்தையும், உரிமைகளையும் செயலுறுத்தி **"இருக்கின்ற இடத்தில்" "இருக்கின்ற நிலையில்" மற்றும் "இருக்கின்றவற்றுடன்" மற்றும் "திரும்ப பெறத்தகாத வகையில்"** என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும். அசையாச் சொத்துகள் விபரம், குறைந்தபட்சக் கேட்பு விலை, டேவணித்தொகை (EMD) விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அறியப்பட்ட வில்லங்கங்கள் பின்வருமாறு. : (1) சொத்தின் மீது நிலுவையில் உள்ள GST பொறுப்பு உள்ளது. (2) முந்தைய நில உரிமையாளரான திரு. குப்பனின் சகோதரி திருமதி. B. கனகவள்ளி, சொத்துக்களில் 1/3 பங்கு பங்கு கோரி தாக்கல் செய்த ஒரு சிவில் வழக்கு (O.S.) நிலுவையில் உள்ளது. அவருக்கு ஆதரவாக முதற்கட்ட தீர்ப்பு ஆணை நிறைவேற்றப்பட்டுள்ளது, மேலும் இந்த உரிமைகோரல் தொடர்பாக சொத்தில் ஒரு முடக்கமும் குறிக்கப்பட்டுள்ளது.

**சொத்து விபரம் :** வேலூர் மாவட்டம், அரக்கோணம் வட்டம், கையனூர் சிற்றூராட்சி, கையனூர் கிராமம், எண்.88 இல் அமைந்துள்ள, காலி நிலங்களின் 4.46¼ ஏக்கர் (1,94,536 சதுர அடிக்கு சமம்) மொத்த பரப்பளவில் பிரிக்கப்படாத 2/3 பங்கு. பின்வரும் சர்வே எண்களில் உள்ளது: சர்வே எண்.281/1A1 - மொத்த பரப்பளவு: 2.25 ஏக்கர் (91 ஏர் /98,100 சதுர அடி / 9,113.72 சதுர மீட்டருக்கு சமம் ). சர்வே எண்.281/1A2 - மொத்த பரப்பளவு: 2.21¼ ஏக்கர் (89.5 ஏர் / 96,436 சதுர அடி/ 8,959.13 சதுர மீட்டருக்கு சமம்) இவ்வாறு, மாற்றப்படும் 2/3 பங்கு பிரிக்கப்படாத பங்கு தோராயமாக 2.97½ ஏக்கர் (1,29,690 சதுர அடிக்கு சமம்), அதனுடன் இணைக்கப்பட்ட அனைத்து வழி உரிமைகள், புழக்க உரிமைகள் மற்றும் அதில் உள்ள துணைப் பொருட்கள் முழு **சொத்தின் எல்லைகள்: வடக்கு:** 40 அடி அகல தார் சாலை, **தெற்கு:** 20 அடி அகலம் கௌதமுர சாலை, **கிழக்கு:** கையனூர் கிராமத்தில் உள்ள மனைகள் **மேற்கு:** மகளிர் சங்க அலுவலகம்

இந்த சொத்து அரக்கோணம் பதிவு மாவட்டத்திலும், அரக்கோணம் இணை எண் 1 சார் பதிவு மாவட்டத்திலும் அமைந்துள்ளது.

**குறைந்தபட்சக் கேட்பு விலை : இந்திய ரூபாய் 1,55,00,000/- டேவணித்தொகை: இந்திய ரூபாய் 15,50,000/-**

**மின்-ஏல தேதி & நேரம்: 20.06.2025 காலை 11 மணி முதல் மதியம் 12 மணி வரை**

**ஆய்வு தேதி: 10.06.2025**

**குறைந்தபட்ச ஏல அதிகரிப்பு தொகை: இந்திய ரூபாய் 1,55,000/-**

**ஏல பங்கேற்பு கடிதம்/KYC ஆவணம்/EMD சான்று சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி மற்றும் நேரம்: 19-06-2025**

ஏலம் OAPL மூலம் ஆன்லைனில் நடத்தப்படும். EMD (DD/ அசல் செலுத்து ஆணை அல்லது NEFT/ RTGS மூலம் பணம் அனுப்புதல்) உடன் ஏலத்தை (ஆன்லைன் மற்றும் அச்சு நகலை) சமர்ப்பிக்க கடைசி தேதி **19.06.2025 மாலை 5:00 மணி வரை**. விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, **https://omkaraarc.com/auction.php** மற்றும்/அல்லது **https://www.bankeauctions.com/** இல் கொடுக்கப்பட்டுள்ள இணைப்பைப் பார்க்கவும். EMD-ஐ டெபாசிட் செய்து, உள்நுழைவு ஐடி மற்றும் கடவுச்சொல்லை உருவாக்குதல், தரவைப் பதிவேற்றுதல், மின்-ஏல செயல்முறை குறித்த ஏலப் பயிற்சியைச் சமர்ப்பித்தல் போன்றவற்றில் உதவி தேவைப்படும் ஏலதாரர்கள் மின்-ஏல சேவை **வழங்குநரை "M/s C1 இந்தியா பிரைவேட் லிமிடெட்" தொடர்பு கொள்ளலாம். தொலைபேசி எண்: +91-7291981124/25/26, உதவி ' மின்னஞ்சல் முகவரி: support@bankeauctions.com, திரு. பவிக் பாண்டியா maharashtra@c1india.com, 8866682937** மேலும் சொத்து தொடர்பான ஏதேனும் வினவல்களுக்கு அதிகாரப்பூர்வ அலுவலர் **திரு. ராஜேஷ் ஜுமானி (அலைபேசி: 988406 2068) மின்னஞ்சல்: rajesh.jumani@omkaraarc.com** தொடர்பு கொள்ளவும். ஏலத்தில் பங்கேற்க விரும்புவோர் திவால்நிலை மற்றும் நொடிப்புநிலைச் சட்டம், 2016 இன் பிரிவு 29A இன் கீழ் இணங்கி உறுதிமொழி அறிக்கை வழங்க வேண்டும், விரிவான தகவலுக்கு விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளைப் பார்க்கவும்.

**சட்டப்பூர்வ விற்பனை அறிவிப்பு- கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002-இன் விதி விதி 8(6) இதனுடன் 9(1)இன் ஷரத்துகளின் கீழ்**

இவ்வறிவிப்பானது, மேற்சொன்ன கடன் கணக்குக்கான கடன்தாரர்(களுக்கு)/ ஜாமின் தாரர்களுக்கு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 இன் ஷரத்துகள் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002-இன் விதி 8(6) – இதனுடன் – 9(1)இன் கீழ் மின் ஏலம் மூலம் மேற்குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்திற்குள் , அவரவர்களால் விரும்பப்படும் பட்சத்தில், இதன் மேற்குறிப்பிட்ட நிலுவைத்தொகையை ஏலம் முடிவதற்குள் எந்த ஒரு நேரத்திலும் மேற்கொண்டு வரும் வட்டி மற்றும் அனைத்து செலவுகள் மற்றும் கட்டணங்களுடன் திருப்பி செலுத்தி, சொத்துக்களை மீட்டுக்கொள்ளும் அறிவுறுத்தலுடன் நடத்தப்படும் ஏலம் / விற்பனை மூலம், அதிகாரப்பூர்வ அலுவலர் / ஈடு பெற்று கடனளித்தவரின் அதிகார வரம்பில் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(5) ல் பரிந்துரைக்கப்பட்ட ஏதேனும் முறையில் சொத்து விற்பனை செய்யப்படும் என்பதை தெரிவித்து வழங்கப்படும் (15) பதினைந்து நாள்களுக்கு குறைவிலாது வழங்கப்பட வேண்டிய கட்டாய அறிவிப்பும் கூட.

ஓம்/-அதிகாரப்பூர்வ அலுவலர்

தேதி : 30.05.2025

இடம் : வேலூர் (இந்தியா ரிசர்ஜென்ஸ் ARC டிரஸ்ட் VI-ன் டிரஸ்டி என்ற தகுதியில் செயல்படுவது)



**IKF ஃபைனான்ஸ் லிமிடெட்**

தலைமை அலுவலகம்: #40-1-144, கார்ப்பரேட் மையம், எம்.ஜி.ரோடு, விஜயவாடா-520 010. தொலைப்பேசி எண்: 0866-2474644.

**கோரிக்கை அறிவிப்பு [பிரிவு 13(2)]**

பின்வரும் கடன்தாரர்(கள்), கூட்டுக் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமின்தாரர்(கள்) (1) **M/s திவ்யா ஸ்டோர் பிரதிநிதியாக அதன் உரிமையாளர் திருமதி திவ்யா, (2) திருமதி திவ்யா க/பெ ஜீவசசிராஜன், (3)